**CHENNAI METROPOLITAN DEVELOPMENT AUTHORITY**
Thalamuthu Natarajan Building, No.1, Gandhi Irwin Road, Egmore,
Chennai - 600 008
Phone : 28414855 Fax: 91-044-28548416
E-mail: mscmda@tn.gov.in
Web site: www.cmdachennai.gov.in

# செய்திக் குறிப்பு

சென்னை பெருநகர எல்லைக்குள் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் **16.4.2010** அன்று பழைய கதவு எண்.16, புதிய கதவு எண்.3, பத்மநாபன் செட்டி தெரு, (வடக்கு உஸ்மான் சாலையின் அருகில்) தியாகராயநகர், சென்னை – 600 017–ல் கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன்படி பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இக் கட்டிடத்தின் உரிமையாளர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து 03.02.2009 அன்று அடித்தளம் (பகுதி) + வாகன நிறுத்தும் தளம் மற்றும் நான்கு தளங்கள் கொண்ட 8 குடியிருப்புகளுக்கான குடியிருப்புக் கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி பெற்றுள்ளார். ஆனால், அடித்தளம் (பகுதி) + வாகன நிறுத்தும் தளம் + நான்கு தளங்கள் மற்றும் ஐந்தாவது தளம் (பகுதி) கொண்ட வணிக உபயோகத்திற்கான கட்டிடத்தை கட்டியுள்ளார். கட்டிடத்தின் உரிமையாளர் 06.02.2010 அன்று ‘**இந்து**’ ஆங்கில நாளிதழில் ‘**பிராபர்டீ பிளஸ்**’ இணைப்பு பக்கம்–5–ல் இக்கட்டிடம் வங்கிகள், உணவகங்கள், அலுவலகங்கள் ஆகிய வணிக உபயோகத்திற்கு முன்னுரிமை தருவதாகவும், விருப்பமுள்ளவர்கள் வரவேற்கப்படுகிறார்கள் என்றும் விளம்பரம் செய்துள்ளார். கட்டிடத்தின் உரிமையாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கான அனுமதி பெற்று, வணிக கட்டிடமாக தேவையான இடைவெளிகள், கட்டிடத்தின் உபயோகம் மற்றும் தரைதள குறியீட்டிற்கான வளர்ச்சி விதிகளை மீறி கட்டியுள்ளார். ஆகையால், இக்கட்டிடம் சீல் வைக்கப்பட்டது.

**உறுப்பினர்–செயலர்**